[2020 பிப்ரவரி 19

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

46—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***57265—திரு. எ. ராமர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு, அரசின் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தினால், இந்த ஆண்டு அதனை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களை வணங்குகிறேன். குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்தராவுத்தன்பட்டியில் உள்ள மாணவர்கள் உயர்நிலைக் கல்வியைப் படிப்பதற்கு, 5 கி.மீ. தொலைவில் உள்ள கட்டாரிப்பட்டி மற்றும் பஞ்சப்பட்டியில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குத்தான் செல்ல வேண்டும். இந்தக் கிராமத்தில் உள்ள ஏழை விவசாயக் கூலி வேலை பார்க்கும் பிள்ளைகள் உயர்நிலைக் கல்வி படிப்பதற்கு அரசின் விதிமுறைகளில் உள்ள நிபந்தனைகளான இடம், கட்டடம் உள்ளதாலும், பொது மக்கள் பங்குத் தொகையைத் தருவதற்குத் தயாராக இருப்பதாலும், மேற்குறிப்பிட்ட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பள்ளியில், 8 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் 11 பேர்தான் இருக்கின்றார்கள். அப்பள்ளியைத் தரம் உயர்த்திடத் தேவையான இடம் மூன்று ஏக்கர் இருக்க வேண்டும். ஆனால், அங்கு ஒன்றரை ஏக்கர் நிலம்தான் இருக்கின்றது. அதேபோன்று, எட்டாம் வகுப்பில் குறைந்தது 50 மாணவர்கள் இருக்க வேண்டும். ஆனால், 11 பேர்தான் அங்கு படிக்கிறார்கள். எனவே, அரசின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தினால்தான் அதைத் தரம் உயர்த்த இயலவில்லை என்று நான் குறிப்பிட்டேன். அரசின் விதிமுறைகள் பூர்த்தியாகும்பட்சத்தில், அரசு அதுகுறித்துப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், சின்னயம்பாளையம்*

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தியும், கூடலூர் ஊராட்சி, ராக்கம்பட்டி துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தியும், பில்லூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தியும் தந்திடக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பாதிரிப்பட்டியில் உள்ள தொடக்கப் பள்ளி கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தலைமையாசிரியர் இல்லாமல் இயங்கி வருகிறது. எனவே, அப்பள்ளிக்கு உடனடியாகத் தலைமை ஆசிரியரை நியமித்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், குளித்தலை ஒன்றியம், நல்லூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தியும், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், கொசூர் ஊராட்சி, குப்பமேட்டுப்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தியும் தந்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

தோகைமலை ஒன்றியம், கல்லை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பே அரசுக்கு செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தியும், இன்றுவரை அப்பள்ளி தரம் உயர்த்தப்படாமல் உள்ளது. கடந்த ஆண்டு கேள்வி நேரத்தில் தோகைமலை மேல்நிலைப் பள்ளியில் 4,000 மாணவ, மாணவிகள் படிப்பதால், அதனை ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகளாகப் பிரித்துத் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் கூறினார்கள். இதுவரை பிரித்துத் தரவில்லை. இந்த ஆண்டாவது மாணவ, மாணவிகள் நலன் கருதி, ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகளாக அதைப் பிரித்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தோகைமலை மேல்நிலைப் பள்ளியைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பள்ளி ஆண், பெண் ஆகிய இருபாலரும் படிக்கின்ற பள்ளியாக இருக்கின்றது. அப்படி இருபாலரும் படிக்கின்ற அப்பள்ளியைப் பிரிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதால், அதனை பெண்களுக்கான மேல்நிலைப் பள்ளியாகவும், மாணவர்களுக்கான உயர்நிலைப்

2020 பிப்ரவரி 19]

பள்ளியாகவும் பிரித்து, இந்த ஆண்டு முதல் செயல்படுவதற்கு ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் இதை எடுத்துச்செல்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பாதிரிப்பட்டியில் உள்ள பள்ளிக்கு தலைமையாசிரியர் இல்லை என்ற ஒரு குறையை உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார்கள். திங்கட்கிழமை அன்று நீங்கள் அங்கு செல்கிறபோது அங்கே தலைமையாசிரியர் பணியில் இருப்பார்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, வாலாஜா ஒன்றியம், செட்டித்தாங்கல் ஊராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஏறத்தாழ 412 மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள், பழைய செட்டித்தாங்கல், தண்டலம், வள்ளலார் நகர், வானபாடி, எரிகொடி, லாலிக்குப்பம், எருக்கந்தொட்டி, மாந்தாங்கல் ஆகிய இடங்களிலிருந்து வந்து படிக்கிறார்கள். அவர்கள் +1, +2 படிப்பு படிக்க வேண்டுமென்றால், ஏறத்தாழ 8–லிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வாலாஜா, ராணிப்பேட்டை, அம்மூருக்குப் போக வேண்டியிருக்கிறது. 2017–ல் இப்பள்ளியைத் தரம் உயர்த்த விண்ணப்பித்து செய்து இதற்கென 2,00,000/– ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரைக்கும் இப்பள்ளி தரம் உயர்த்தப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பள்ளியை உடனடியாக மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா ஒன்றியம், கல்மேல்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் முஸ்லிம் மாணவர்கள் உருது படிக்கிற நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அங்கு ஏறத்தாழ 264 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். அவர்கள் 9–வது வகுப்பு படிக்க வேண்டுமென்றால், பக்கத்தில் எங்கேயும் உருது பள்ளிகள் இல்லை. ஏறத்தாழ 20 கி.மீ. தொலைவில் உள்ள விஷாரம் போக வேண்டும். அப்பகுதியிலுள்ள பெண்கள் வெகு தொலைவு சென்று படிக்க முடியாத நிலையில், எட்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். எனவே, அவர்கள் 9–வது வகுப்பு படிப்பதற்கு

ஏதுவாக, கல்மேல்குப்பம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்களுடைய நலன் கருதி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டில் இன்றைக்கு நிறைவேற்றி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இஸ்லாமியப் பெண்கள் தொலைதூரம் சென்று, பள்ளியில் படிக்க இயலாது என்பது எங்களுக்கும் தெரியும். ஆகவே, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, வாலாஜா ஒன்றியம், செட்டித்தாங்கல் அரசு உயர்நிலைப் பள்ளிக்காக 2 இலட்சம் ரூபாய் 2017–ல் கட்டப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசின் விதிமுறைகள் அனைத்தும் பூர்த்தியாகும்பட்சத்தில், அது பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மாவின் வழியில் இன்றைக்குத் தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் வழி நடத்திக்கொண்டிருக்கின்ற, எதிரிகளுக்கெல்லாம் சிம்மசொப்பனமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அய்யா எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர்

2020 பிப்ரவரி 19]

அய்யா ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். பள்ளிக் கல்வியிலே எண்ணற்ற மாற்றங்களைக் கொண்டுவந்து அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவச் செல்வங்களுக்கு கணினி முதல் காலணி வரை விலையில்லாமல் கொடுத்து திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

கடந்த கல்வி ஆண்டில் மாணவர்களுக்கு computer *சேவை என்ற விதத்திலே, 400 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுவது என்பது இரத்து செய்யப்படாமல் உள்ளது. அந்தக் கட்டணத்தை வரும் கல்வி ஆண்டில் இரத்து செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* computer *பயில்கின்ற மாணவர்கள் கட்டணங்கள் செலுத்தி பயின்று கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அது பற்றியும் இந்த ஆண்டு எடுத்துச் செல்லப்படும். இதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதியில் அரசு உதவி பெறும் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் சுமார் 75 பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகள் எல்லாம் சுதந்திரத்திற்கு முன்னால், கிட்டத்தட்ட 70, 80, 90 ஆண்டுகளுக்கு முன்பு, கல்வி தர வேண்டுமென்ற ஓர் உயர்ந்த நோக்கத்தோடு, அர்ப்பணிப்பு உணர்வோடு தொடங்கப்பட்ட அரசு உதவி பெறும் பள்ளிகள். அந்தப் பள்ளிகளுக்கு நான் ஆய்வுக்குச் செல்லும்போதெல்லாம், 'எங்களுக்கு கழிப்பறை வேண்டும், வகுப்பறை வேண்டும்' என்று நிறைய கோரிக்கைகளை வைக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதை வழங்கிட*

இயலாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றோம். உயர்ந்த நோக்கத்தோடு தொடங்கப்பட்ட அந்தப் பள்ளிகளில் குடிநீர் சுத்திகரிப்புக்கு கண்டிப்பாக நீங்கள் நிதி வழங்கிட வேண்டும். சில இடங்களில் அரசுப் பள்ளிகளைவிட அரசு உதவி பெறும் பள்ளிகளில் strength நிறைய இருக்கிறது. எனவே, தயவுசெய்து விதிகளைத் தளர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் இதுபோன்ற பணிகளை மேற்கொள்ள, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி வழங்க வழிவகை செய்ய வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைக்க விரும்புகின்றேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது நல்ல யோசனைதான். அதைப்பற்றி நானும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்கிறோம். ஏனென்று சொன்னால், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பல இடங்களில் நிதி நெருக்கடி இருக்கிறது என்பதை எங்களால் உணர முடிகிறது. அப்பள்ளிகளுக்கும் சிறந்த கட்டடங்கள் தேவைப்படுகின்றன. ஆங்கிலப் பாடங்களையும் அப்பள்ளிகளில் பயிற்றுவிக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை கனிவோடு பரிசீலிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலைக் கல்வியில் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் இடைநிற்றல் விகிதங்களைப் பார்க்கும்போது, 2016–2017 ஆம் ஆண்டு 8 சதவீதமாக இருந்த இடைநிற்றல் (dropout) என்பது 2017–2018 ஆம் ஆண்டில் 16 சதவீதமாக உயர்ந்திருக்கிறது என்று நாடாளுமன்றத்தில் மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர்

2020 பிப்ரவரி 19]

திரு.ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழக சட்டமன்றத்தில் தொடர்ந்து வைக்கப்படக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்புகளில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இடைநிலைக் கல்வியில் இடைநிற்றல் விகிதமானது 2015–2016–ல் 3.76 சதவீதம்; 2016–2017–ல் 3.75 சதவீதம்; 2017–2018–ல் 3.61 சதவீதமாக இருக்கிறது என்று தெரிவித்து வருகிறார்கள். அதாவது, 2017–2018–ல் இடைநிற்றல் 3.61 சதவீதமாக இருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்தில் இடைநிற்றல் 16 சதவீதமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் தெரிவித்திருக்கும் புள்ளிவிவரத்திற்கும், நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கும் புள்ளிவிவரத்திற்குமிடையே நிறைய வித்தியாசம் இருக்கிறது. இந்த மிகப் பெரிய வித்தியாசம் ஏன் ஏற்பட்டிருக்கிறது? இதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியின்போது, மத்திய அரசாங்கத்திடம் இருக்கக்கூடிய data தவறு என்று குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார்கள். நம்முடைய சுகாதாரத் துறைக்கு மத்திய அரசாங்கம் விருது வழங்கும்போது data சரியாக வருகிறது; மற்ற துறைகளுக்கெல்லாம் மத்திய அரசாங்கம் விருது வழங்கும்போதெல்லாம் data சரியாக வருகிறது; (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இடைநிற்றலில் மட்டும் மத்திய அரசாங்கத்தின் data எப்படித் தவறாகப் போகிறது? இதன் மர்மம் என்ன என்பதை மட்டும் நான் அன்போடு கேட்டறிய விரும்புகிறேன். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய விளக்கம் அளிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, data தவறு என்று நான் சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், இந்தப் புள்ளிவிவரங்கள்

எல்லாம் இந்த அரசின் சார்பாக கொடுக்கப்படுகின்ற புள்ளிவிவரங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகவும், அதற்கு முன்பு அமைச்சராகவும் இருந்தவர். ஆகவே, இதுபற்றி அவருக்குத் தெரியும். 2017–2018 ஆம் ஆண்டுகளில் ஆசிரியர்களை வைத்துதான் மாணவர்களுடைய எண்ணிக்கை, இடைநிற்றலின் எண்ணிக்கை ஆகிய புள்ளிவிவரங்களை எடுத்து வந்தோம். இப்போது online மூலமாகப் புள்ளிவிவரங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதுவொரு மாற்றம்.

இரண்டாவது மாற்றத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அல்ல. இடைநிலைக் கல்வியில் 2014–2015, 2015–2016 ஆம் ஆண்டுகளில் பார்க்கின்றபோது, இடைநிற்றல் 3.97 சதவீதமாகவும், 2016–2017 ஆம் ஆண்டில் 3.75 சதவீதமாகவும்தான் இருந்திருக்கிறது. நம்முடைய கணக்கீட்டின்படி அதுபோன்றுதான் இருக்கிறது மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, இதே நிலைதான் எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது புதுதில்லியைப் பொறுத்தவரையில், 2015–2016–ல் இடைநிற்றல் 11.8 சதவீதம், 2016–2017–ல் 10.8 சதவீதம், 2017–2018–ல் 17.5 சதவீதம் என்று அங்கு தோராயமாக 7 சதவீதம் மாறுபாடு இருக்கிறது. அசாம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், 2015–2016–ல் 27.6 சதவீதம், 2016–2017–ல் 26.6 சதவீதம், ஆனால், 2017–2018–ல் 33.7 சதவீதம் என்று தோராயமாக 6 சதவீதம் அங்கே வேறுபாடு இருக்கிறது. அதேபோன்றுதான் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 2015–2016–ல் 8.1 சதவீதம், 2016–2017–ல் 10 சதவீதம், 2017–2018–ல் 16.2 சதவீதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 6 சதவீதம் வித்தியாசம் இருக்கிறது. அதேபோன்று, உத்திரப்பிரதேச மாநிலத்தில் பார்க்கின்றபோது, 2015–2016–ல் 10.22 சதவீதம், 2016–2017–ல் 12.7 சதவீதம், 2017–2018–ல் 19 சதவீதம் என்று, 6 சதவீதம் வித்தியாசம் இருக்கிறது. 2017–2018 ஆம் ஆண்டு இடைநிற்றலை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட புள்ளிவிவரங்களில் ஒவ்வொரு மாநிலத்திலும் இந்த வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசம் நம்முடைய மாநிலத்திலும் இருக்கிறதே தவிர, நம்முடைய புள்ளிவிவரங்கள் சரியாகத்தான் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். எங்கள் புள்ளிவிவரம் எப்பொழுதுமே சரியாகத்தான் இருக்கும். மத்திய அரசின் விருதினைப் பெறுவதற்காக மட்டுமல்ல; என்றைக்குமே தெளிவாகத்தான்

நாங்கள் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறோம். எங்கள் புள்ளிவிவரங்கள் சரியாகத்தான் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். பீகார் மாநிலத்தைப் பொறுத்தவரையில் 39.6 சதவீதம் இடைநிற்றல் இருக்கிறது. இதுதான் highest. *ஆகவே, ஒவ்வொரு மாநிலத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இந்திய அளவில் நான்காம் இடத்தில் தமிழகம் இருந்துகொண்டிருக்கிறது என்பதையும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரும்பணியின் காரணமாகவும், இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியின் காரணமாகவும், கணினி, சைக்கிள் போன்றவற்றை மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக வழங்குவதன் காரணமாகவும் இடைநிற்றல் விகிதம் குறைவாக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

புதிய துணை மின் நிலையம்

***22913—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், நாகவேடு கிராமத்திற்கு புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், நாகவேடு கிராமத்தில்